பிரதோஷத்தை முன்னிட்டு, வெம்பாக்கம் தாலுகா அப்துல்லாபுரத்தில் உள்ள சந்திரமவுலீஸ்வரர் சிறப்பு அலங்காரத்திலும். (2வது படம்) தண்டராம்பட்டு அடுத்த மலையனுார்செக்கடி கிராமத்தில் காசி விசுவநாதர் கோயிலில் உள்ள நந்தி, சிறப்பு அலங்காரத்திலும். (3வது படம்) சேத்துப்பட்டு, ஆரணி சாலையில் உள்ள சிவன் கோயிலில் சுவாமி அலங்காரத்திலும் (4வது படம்) இஞ்சிமேடு பெரியமலை சிவன் கோயிலில் அலங்கார ரூபத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்த மூலவர் சிவன். (கடைசி படம்) கொளத்துார் காமாட்சி அம்மன் சமேத ஏகாம்பர ஈஸ்வரர் இரட்டை சிவன் கோயிலில், நந்தி சிறப்பு அலங்காரத்தில் அருள்பாலித்தார்.

சிவன் கோயில்களில் பிரதோஷ விழா

■ திருவண்ணாமலை, ஏப்.30-

சித்திரை மாத வளர்பிறை பிரதோஷத்தையொட்டி, தண்டராம்பட்டு அடுத்த மலையனூர் செக்கடி கிராமத்தில் உள்ள காசி விசுவநாதர் கோயில் வளாகத்தில் இருக்கும் நந்திக்கு நேற்று பால், தயிர், பஞ்சாமிருதம், சந்தனம், விபூதி, பூக்கள் ஆகியவற்றை கொண்டு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது.

இதில் சுற்று வட்டார கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான சிவ பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். எல்லாருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

வெம்பாக்கம்

வெம்பாக்கம் தாலுகா, அப்துல்லாபுரம் கிராமத்தில் உள்ள சந்திரமவுலீஸ்வரர் கோயிலில் நேற்று மாலை 4.30 மணிக்குள் 6 மணிக்குள்ளாக நந்திக்கு சிறப்பு அபிஷேகமும், மாலை 6 மணிக்கு மூலவருக்கு சிறப்பு அபிஷேகமும் அலங்காரமும் நடந்தன.

தொடர்ந்து, பிரதோஷ நாயகர் சிறப்பு அலங்காரத்தில் கோயிலை சுற்றி வந்து பக்தர்களுக்கு அருள் புரிந்தார். இதில் அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டனர். எல்லாருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

சேத்துப்பட்டு

சேத்துப்பட்டு அடுத்த இஞ்சிமேடு பெரியமலை சிவன் கோயிலில் மூலவர் மற்றும் உற்சவர்களுக்கு சிறப்பு அபிஷேகம் நடத்தப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. தொடர்ந்து, கொடிமரத்துக்கு அருகே உள்ள நந்தி பகவானுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரத்துடன் சிறப்பு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர், கோயில் உட்புற வளாகத்தில் அலங்கரிக்கப்பட்ட சிவனை ரிஷப வாகனத்தில் அமர்த்தி உலா நடந்தது.

இதில் சேத்துப்பட்டு, பெரணமல்லூர், வந்தவாசி, செய்யாறு, ஆரணி உள்ளிட்ட நகரங்களில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபட்டனர். எல்லாருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை பெரிய மலை சிவன் கோயில் நிர்வாகி பெருமாள் சுவாமிகள் மற்றும் அறக்கட்டளை நிர்வாகிகள், விழாக்குழுவினர் செய்தனர்.

தீ விபத்து தடுப்பு விழிப்புணர்வு

■ வந்தவாசி, ஏப்.30-

வந்தவாசி கிருஷ்ணா கல்வி மையத்தில், மாணவர்களுக்கான கோடைக் கால இலவச பயிற்சி வகுப்பில், தீயணைப்பு மற்றும் மீட்பு துறை சார்பில் தீ விபத்தும் தடுக்கும் வழிமுறைகளும் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடந்தது. கல்வி மைய முதல்வர் சீனிவாசன் தலைமை வகித்தார். வக்கீல் குமார் முன்னிலை வகித்தார். ஓவிய ஆசிரியர் பார்த்திபன் வரவேற்றார்.

வந்தவாசி கிருஷ்ணா கல்வி மையத்தில் நடந்த தீ விபத்து தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி, போட்டியில் வெற்றிபெற்ற மாணவிக்கு தீயணைப்பு நிலைய செயல் அலுவலர் பிரபாகரன் பரிசு வழங்கினார்.

சிறப்பு அழைப்பாளராக வந்தவாசி தீயணைப்பு நிலைய செயல் அலுவலர் பிரபாகரன் கலந்து கொண்டு, தீ விபத்து ஏற்பட்டால் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விளக்கினார். ''அடுப்பு எரியும் போது மண்ணெண்ணை நிரப்பக்கூடாது, மின்சார சாதனங்கள் மற்றும் மின் இணைப்புகள் குழந்தைகளுக்கு எட்டாதவாறு இருக்க வேண்டும், குழந்தைகளை சமையலறையில் தனியாகவிடக் கூடாது, துாங்குவதற்கு முன் அகல்விளக்கையும் அடுப்பையும் அணைக்க வேண்டும்'' என அறிவுறுத்தினார். விடுமுறை நாட்களில் மாணவர்கள் ஆறு, ஏரி, குளம் போன்ற நீர் நிலைகளில் தனியாகச் சென்று குளிக்க கூடாது எனவும் வலியுறுத்தினார்.

நிகழ்ச்சியில் தீ தடுப்பு குறித்த துண்டுப்பிரசுரங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. விழிப்புணர்வு போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

தி.மலையில் 102.2 டிகிரி வெயில்

■ திருவண்ணாமலை, ஏப்.30-

திருவண்ணாமலை மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் நேற்று மதியம் அதிகபட்சமாக 102.2 டிகிரி பாரன்ஹீட் வெயில் பதிவானது. இதனால், நகரில் உள்ள குளிர்பான கடைகள், கூழ் விற்பனை கடைகளில் விற்பனை சூடுபிடித்துள்ளது.

இன்று சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு, கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் மதியம் முதலே ஆயிரக்கணக்கான மக்கள் திருவண்ணாமலையில் குவிந்து வருகின்றனர். பஸ்களில் கூட்டம் அதிகமாக இருந்தது.

பொது அறிவிப்பு

எம்மிடக் கட்சிக்காரர்கள்

திருவண்ணாமலை மாவட்டம், சேத்பட் வட்டம், சித்தாத்துரை கிராமத்தில் வசிக்கும் மோகன் மனைவி **ஷர்மிளாதேவி -1**, ராஜமன்னார் மகன் **ராஜ்குமார்-2** ஆகிய இருவர் சார்பாக வெளியிடும் பொது அறிவிப்பு என்னவென்றால்:

கீழே ஷெட்யூலில் கண்டச் சொத்துக்கள் சம்பந்தமாக விஸ்வநாதன் மனைவி நிரஞ்சனா என்பவர் கனம் போளூர் சப் கோர்ட்டில் தாக்கல் செய்த **அ.வ.எண். 239/2022ல்** பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் பேரில் எம்மிடக் கட்சிக்காரர்கள் கனம் திருவண்ணாமலை கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் எ.எஸ்.நெ.20/2023 என தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. மேற்படி மேல்முறையீட்டை மீண்டும் விசாரணை செய்ய வேண்டும். ஐ.எ.நெ.2/2026 என தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது.

மேற்படி உண்மை நிலவரம் இப்படி இருக்க மேல்முறையீடு நிலுவையில் இருப்பதை மறைத்து ஷெட்யூல் சொத்துக்கள் பேரில் சட்டப்படி செல்லாத ஆவணங்களை பதிவு செய்து பிரச்சனையை ஏற்படுத்துகிறார்கள்.

மேலும் சொத்துக்கள் சம்பந்தமாக மேல்முறையீடு நிலுவையில் இருக்கும்போது யாரும் கிரையமோ அல்லது அடைமானமோ பெற வேண்டாம் என அனைவருக்கும் தெரிவிக்கப்படுகிறது. இதன் பின்னரும் சொத்துக்களை கிரையம் பெற்றால் அது எம்மிடக் கட்சிக்காரர்களை கட்டுப்படுத்தாது என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சொத்து விவரம்

திருவண்ணாமலை மாவட்டம், சேத்பட் வட்டம், போளூர் சப்.டி., சித்தாத்துரை கிராமம்.

1. **பு.ச.எண்.114/2-2.69 செண்ட் தீர்வை ரூ.2.25**
2. **பு.ச.எண்.119/1-4.92 செண்ட் தீர்வை ரூ.5.22**
3. **கிராம நத்தம் சர்வே எண்.208/1 பரப்பு 0015/00154 தீர்வை ரூ.2.00, பட்டா எண்.64 அளவுள்ள காலி மனை.**

K.R.ராஜன் M.A.,B.L.,
வழக்கறிஞர்,
நெ.21, பாதர் சுபேதார் தெரு, ஆரணி

பாக்ஸ் நியூஸ்

சித்ரா பவுர்ணமி: தி.மலை பக்தர்களுக்கு மருத்துவ வசதிகள்

■ திருவண்ணாமலை, ஏப்.30-

சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு, அருணாசலேசுவரர்கோயில் வளாகத்துக்குள் சிறப்பு டாக்டர்களுடன் 8 வென்டிலேட்டர் வசதிகளுடன் 4 மருத்துவ குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கோயில் வளாகம் தவிர்த்து இதர இடங்களில் 54 மருத்துவ குழுக்கள் தயார்நிலையில் உள்ளன. அவசர தேவைகளுக்காக 108 ஆம்புலன்ஸ்கள் 30 மற்றும் 5 பைக் ஆம்புலன்ஸ்கள், இடுக்கு பிள்ளையார் கோயில் அருகில் 108 ஆம்புலன்சுடன் மருத்துவ குழு. நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான 2 ஓய்வெடுக்கும் அறைகளில் 8 அவசர கால சிகிச்சை மையங்கள், குடிநீர் குளோரினேஷன் உறுதி செய்ய 70 சுகாதார ஆய்வாளர்களுடன் 9 குழுக்கள், மண்டல பூச்சியல் வல்லுனருடன் கூடிய 3 நோய் பரப்பி கட்டுப்பாட்டு குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

ஒரு வழிப்பாதை

கிருஷ்ணா லாட்ஜ் சந்திப்பு முதல் பச்சையம்மன் கோயில் வரை உள்ள சாலை நகரில் இருந்து வெளியே செல்லும் மாற்றுப்பாதையாக மாற்றப்பட உள்ளது.

பாதுகாப்பு பணி

பாதுகாப்பு பணியில் 4 ஆயிரத்து 240 போலீசார் ஈடுபடுகின்றனர். இது தவிர, 15 தீயணைப்பு வாகனங்கள், 163 தீயணைப்பு வீரர்கள். 14 அபாயகரமான பகுதிகளில் 45 வனத்துறை வீரர்கள், 40 தன்னார்வலர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள். நகரம், முக்கிய சாலைகள் மற்றும் கிரிவலப்பாதைகளில் மொத்தம் 808 சிசிடிவி கேமராக்கள், கோயில் வளாகத்தில் மட்டும் 250 கேமராக்கள். 30 இடங்களில் காவல் கண்காணிப்பு கோபுரங்கள், 534 இடங்களில் பொது அறிவிப்பு மையங்கள் அமைக்கப்படுகின்றன. கிரிவலப்பாதையில் திருநங்கைகள், யாசகம் கேட்பவர்கள், நரிக்குறவர்கள் அத்துமீறலை கண்காணிக்க சிறப்பு குழுக்கள் இயக்கப்படுகின்றன.

கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண்கள்: கலெக்டர் அலுவலகம் 04175 233344, 04175 233345 எஸ்பி அலுவலகம் 94981 00430, 76958 78100.

தடையற்ற மின்சாரம் வழங்க ஏற்பாடு. தொலை தொடர்பு வசதிக்காக 200 செல்போன் டவர்கள் அமைக்கப்படுகிறது.

உணவு பாதுகாப்பு மற்றும் அன்னதானம்

அன்னதானம் அளிக்க 144 பேருக்கு அனுமதி. உணவை பரிசோதிக்க 7 உணவு பாதுகாப்பு குழுக்கள், 2 மாவட்ட நியமன அலுவலர்கள் 17 உணவு பாதுகாப்பு அலுவலர்கள், உணவின் தரத்தை ஆய்வு செய்ய ஒரு நடமாடும் உணவு பாதுகாப்பு பகுப்பாய்வு கூடமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

திருவண்ணாமலை கிளை

15, RR Complex, போலுர் சாலை, திருவண்ணாமலை-606601.
போன் : 04175-250054, Email: tiruvn@bankofbaroda.bank.in, Web : bankofbaroda.bank.in

(baanknet போர்ட்டலில் நடத்தப்படும் ஏலத்திற்கான செய்தித்தாள்களில் வெளியிடப்படும் சுருக்கமான விற்பனை அறிவிப்பு)

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV-Aயின்படி (விதி 6(2) மற்றும் 8(6)யை பார்க்கவும்)

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் விதிகளின் கீழ் 6(2) மற்றும் 8(6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை மின் ஏலம் மூலம் விற்பனை செய்தல் அறிவிப்பு.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் ஆகியோருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **பாங்க் ஆஃப் பரோடா வங்கி**யின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **''எங்கு உள்ளதோ அப்படியே'' ''எப்படி உள்ளதோ அப்படியே'' மற்றும் '' என்ன இருக்கிறதோ அதே நிலையில்''** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் விபரம், நிலுவைத் தொகை விபரம், சொத்து விபரம் குறைந்தபட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர்கள் மற்றும் முகவரி : M/s. **Ohm Muruga Wood Works உரிமையாளர்** திரு. **ஏழுமலை, நெ. 35,** 2H2, **அவலூர்பேட்டை சாலை, செறியாந்தல், வேங்கிக்கால் அஞ்சல், திருவண்ணாமலை – 606 604. மற்றும் திரு.ஏழுமலை, த/பெ. வெள்ளைகாசி, 666, காலனி , ஆலந்தூர், திருவண்ணாமலை -606702.**

Loan A/c.No.**36790500001829,** நிலுவை தொகை ரூ.**12,55,515.03/-** மேலும் **26.04.2026** அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.

Loan A/c.No.**36790600006608,** நிலுவை தொகை ரூ.**4,97,823.89/-** மேலும் **26.04.2026** அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.

26.04.2026 அன்று மொத்த நிலுவை தொகை ரூ.**17,53,338.92/-**

அசையாச் சொத்தின் சுருக்கமான விவரங்கள் மற்றும் ஏதேனும் வில்லங்கங்கள் இருப்பின்

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை பதிவு மாவட்டம், கடலாடி துணை பதிவு மாவட்டம், செங்கம் தாலுக்கா, ஆலத்தூர் கிராமத்தில் கிராம நத்தம் சர்வே எண். 196, புதிய சர்வே எண். 196/40. இதன் மத்தியில் ஏக்கர் 0.01 ¾ செண்டுக்கு 545 சதுரடி அளவுள்ள மேற்படி மனையில் தட்டோடு வீடு மேற்படி வீட்டில் உள்ள கதவு எண். 666, மின் இணைப்பு எண்.374ல் உள்ள மின்இணைப்பு மின்உபகரணங்கள் காப்புத்தொகை அனைத்தும் உட்பட. நான்கு எல்லைகள் : கிழக்கில் – ஊமையன் வீடு, மேற்கில் – கே. வடிவேல் வகையறா பொது சந்து, வடக்கில் –பாண்டுரங்கன் மனை, தெற்கில் –குழந்தையைபயன் வீடு. வீட்டின் மொத்த பரப்பளவு 545 சதுரடி.

நிர்ணயிக்கப்பட்ட விலை	ரூ. 11,50,000/-	டேவணித் தொகை	ரூ. 1,15,000/-	ஏல உயர்வு தொகை	ரூ. 25,000/-

மின் ஏல தேதி மற்றும் நேரம் **12.06.2026** அன்று மதியம் 2.00 மணி முதல் 6.00 மணி வரை வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

சொத்தினை பார்வையிடும் தேதி : 15.05.2026 (நேரம் காலை 10.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை)
டேவணித் தொகை செலுத்துவதற்கான கடைசி நாள்: 11.06.2026

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு **https://www.bankofbaroda.bank.in/e-auction** மற்றும் **BAANKNET.COM** என்ற இணையதள இணைப்பை பார்க்கவும்/வருகைதரவும். மேலும் ஏலதாரர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அங்கிகரிக்கப்பட்ட அதிகாரி செல்: 9677075502 & 95150 24578 தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 29.04.2026
இடம் : திருவண்ணாமலை

அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர்/
பேங்க் ஆஃப் பரோடா

மூன்று மாதங்களாக சம்பளம் வழங்காததை கண்டித்து போளூர் தரணி சர்க்கரை ஆலை தொழிலாளர்கள் தொடர் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தரணி சர்க்கரை ஆலையில் சம்பள பாக்கி

தாசில்தாரிடம் தொழிலாளர்கள் மனு

■ போளூர், ஏப்.30-

போளூர் அருகே உள்ள தரணி சர்க்கரை ஆலை நிர்வாகம் கரும்பு விவசாயிகளுக்கு பல கோடி ரூபாய் நிலுவைத்தொகை வைத்துள்ளது. இதற்காக கரும்பு விவசாயிகள் சங்கத்தினர் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதேபோல், ஆலை தொழிலாளர்களுக்கும் அடிக்கடி சம்பளம் வழங்காமல் அலைக்கழித்து வருகிறது. இதனால், ஆலை தொழிலாளர்கள் சிலரும் அடிக்கடி உள்ளிருப்பு போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த ஆலை கடந்த 5 ஆண்டுகளாக மூடப்பட்டுள்ளது. ஆனாலும், பராமரிப்பு பணிகளுக்காக தொழிலாளர்கள் சிலர் தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றனர். இந்நிலையில், கடந்த 3 மாதங்களாக சம்பளம் வழங்கவில்லை எனக் கூறி கிட்டத்தட்ட 30 தொழிலாளர்கள் கடந்த 18 நாட்களாக உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதைத் தொடர்ந்து, தொழிலாளர்கள் எல்லாரும் போளூர் தாசில்தார் பாலாஜியிடம் கோரிக்கை மனு அளித்தனர். அதில் தொழிலாளர்கள் கூறியிருப்பதாவது:

நாங்கள் 20 ஆண்டுகளுக்கு மேலாக தரணி சர்க்கரை ஆலை தொழிலாளர்களாக பணிபுரிந்து வருகிறோம். எங்களுக்கு அடிக்கடி சம்பளம் நிறுத்தப்பட்டு பல கட்ட போராட்டங்களுக்குப் பின்னர், மீண்டும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், எங்கள் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் பிஎப் தொகையை கணக்கில் செலுத்தாமல் முறைகேடு செய்து வருகின்றனர். இது தொடர்பாக பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தனித்தனியாக ஆலை நிர்வாகத்துக்கு புகார் மனு அளித்தும் எந்த பதிலும் அளிக்கவில்லை. மேலும், மாதங்களாக எங்களுக்கு சம்பளமும் வழங்கப்படவில்லை.

இதனால், எங்களுக்கு கடும் நிதி நெருக்கடி ஏற்பட்டு, மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளோம். எனவே ஆலை நிர்வாகத்திடம் பேசி எங்களுக்கு தரவேண்டிய சம்பள பாக்கியை உடனே பெற்று தருவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது. மனுவை பெற்றுக்கொண்ட தாசில்தார் பாலாஜி, இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

பைக்கில் சென்ற முதியவர் பலி

■ ஆம்பூர், ஏப். 29-

ஆம்பூர் தாலுகா ரெட்டி தோப்பு பகுதியை சேர்ந்தவர் கமலநாதன் (58). இவர், ஆம்பூர் மிட்டாளம் பஞ்சாயத்து குடக்கந்தூர் பகுதிக்கு தனது பைக்கில் சென்று கொண்டிருந்தார். அப்போது, திடீரென பைக்கில் இருந்து மயங்கி கீழே விழுந்தார். அவரை அங்கிருந்தோர், மீட்டு ஆம்பூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள் அவர், ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

வேன் மோதி வாலிபர் பலி

■ கண்ணமங்கலம், ஏப்.30-

கண்ணமங்கலம் அடுத்த கொங்கராம்பட்டைச் சேர்ந்தவர் மணிகண்டன் (26). தனியார் நிறுவனத்தில் கூலிவேலை செய்து வந்தார். திருமணமாகவில்லை. இவர், கடந்த 18ம் தேதி இரவு கொங்கராம்பட்டில் இருந்து டூவீலரில் ஆரணிக்குச் சென்றுவிட்டு, டூவீலரில் வீடு திரும்பி கொண்டிருந்தார்.

மணிகண்டன்

அத்திமலைப்பட்டு பெட்ரோல் பங்க் அருகே வந்தபோது, வேலூரில் இருந்து ஆரணி நோக்கிச் சென்ற லோடுவேன், வலது புறம் திரும்பி பெட்ரோல் பங்க்கில் நுழைந்தது. எதிர்பாராத விதமாக வேன், டூவீலர் மீது மோதியதில், துாக்கி வீசப்பட்ட மணிகண்டன் படுகாயம் அடைந்தார். அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தகவலறிந்த கண்ணமங்கலம் போலீசார் விரைந்து சென்று ஆட்டோவை பறிமுதல் செய்தனர். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று காலை மணிகண்டன் இறந்தார். இதையடுத்து, லோடுவேன் டிரைவரை போலீசார் தேடி வருகின்றனர்.

பக்த கோடிகளை அன்புடன் வரவேற்கிறோம்!
ஆரணி டவுன், கொசப்பாளையம்
திருமலைசமுத்திரத்தில் எழுந்தருளியிருக்கும்
அருள்மிகு அலர்மேல்நாயகி சமேத
ஸ்ரீ கில்லா ஸ்ரீனிவாசப்பெருமாள் திருக்கோயில்
ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா சம்ப்ரோக்ஷண
மஹா கும்பாபிஷேகம்
திருக்குடமுழக்கு நன்னீராட்டுப் பெருவிழா
இன்று 30.04.2026 வியாழக்கிழமை
காலை 9.00 - 10.30 மணிக்குள் நடைபெறும்.
திருக்கோவிலூர் ஸ்ரீ மத் எம்பெருமானார் ஜீயர் 26- ஆம் பட்டம் ஸ்வாமி
ஸ்ரீ உ.வே.தேஹளீஸ ராமாநுஜாசாரீயர்
முன்னிலையில் வைகானஸ ஆகம முறைப்படி நடைபெறும்
மாலை 5.00 மணிக்கு: திருக்கல்யாண உற்சவம்
இரவு 7.00 மணிக்கு: சுவாமி திருவீதி புறப்பாடு
கும்பாபிஷேகத்திற்கு வருகைத் தரும் பக்தகோடிகளை வருக... வருக.... என வரவேற்கிறோம்.
திருமதி. B.லதா பாபு
அறங்காவலர் குழு தலைவர்
திருமதி. P.உமா பாண்டியன்
அறங்காவலர்
திரு. சி.சசி பாபு
அறங்காவலர்
இங்ஙனம்
திருக்கோயில் பரம்பரை அர்ச்சகர் மற்றும் சர்வசாதகம்:
S.குப்புசாமி பட்டாச்சாரியார்
திருக்கோயில் நிர்வாகம் மற்றும் ஆரணி நகர பொதுமக்கள்,
திருமலை சமுத்திரம், கொசப்பாளையம், ஆரணி.